**<u>அசல் வழக்கு எண். 14/2020</u>**

14.02.2025

**பெயர் – சின்னப்பன் (எ) சின்னச்சாமி (Pw2)**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1) இந்த வழக்கின் வாதி என்னுடைய மனைவி என்றால் சரிதான். தாவாச் சொத்து நான் எனது மனைவிக்கு 18.04.2012ம் தேதி எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் வாயிலாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்கூறிய செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட ஆவணம் என்றால் சரிதான். துங்காவி கிராமம் சீலநாயக்கன்பட்டியில் உள்ள க.ச.497/7ல் உள்ள பு.ஏ.6.09 பூமி ஒரு மாரப்ப கவுண்டருக்கும் அவரது சகோதரர் சுப்பே கவுண்டருக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்றால் 1977ம் ஆண்டு வரை அவர்களுக்கு பாத்தியப்பட்டதாக இருந்தது. அதற்கு பின்னர் தாவாச் சொத்து எங்களுக்கு பாகப் பிரிவினை செய்யப்பட்டது. தாவாச் சொத்து மாரப்ப கவுண்டருக்கு அவரது சகோதரர் சுப்பே கவுண்டருக்கும் பாத்தியப்பட்ட பிதுரார்ஜித சொத்து என்றால் சரிதான். பாகம் பிரிப்பதற்கு முன்பு மாரப்ப கவுண்டரும் அவரது மகன் சேலுச்சாமி கவுண்டரும் மற்றும் அவரது சகோதரர் சுப்பே கவுண்டரும் மேற்படி சொத்துக்களைப் பொறுத்து எந்த ஒரு ஆவணமும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான்.

(2) மாரப்ப கவுண்டரின் மனைவியின் பெயர் மாராத்தாள் என்றால் சரிதான். மாரப்ப கவுண்டரின் ஒரே மகன் எனது தந்தை வேலுச்சாமி கவுண்டர் என்றால் சரிதான். எனது தந்தை வேலுச்சாமி கவுண்டருக்கும் குப்பாத்தாள் என்ற முதல் மனைவியும், செல்லம்மாள் என்ற இரண்டாவது மனைவியும் உண்டு என்றால் சரிதான். முதல் மனைவி குப்பாத்தாளுக்கு சரோஜினி (எ) வள்ளியம்மாள், சிவகாமி, செல்வாம்பாள் மற்றும் கோபாலன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். பாகப் பிரிவினைக்கு முன்பே கோபாலன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்கூறிய கோபலனின் வாரிசுகள் லதா, சாவித்திரி மற்றும் தாரணி என்றால் சரிதான். எனது தகப்பனாரின் இரண்டாவது மனைவியான செல்லம்மாளுக்கு ரேவதி மற்றும் நானும் வாரிசுகள் என்றால் சரிதான். கடந்த 29.06.1977ம் தேதி பு.ஏ.6.09 பூமியை வேலுச்சாமி கவுண்டரின் வாரிசுகளும், சுப்பே

கவுண்டரின் மகனுமான பழனிச்சாமி கவுண்டரும் பாகம் பிரித்துக் கொண்டோம் என்றால் வாய் மொழியாக பாகம் பிரித்துக் கொண்டோம். நான் மேற்கூறியவாறு வாய் மொழியாக பாகம் பிரிக்கவில்லை என்றாலும், ஆவணத்தின் படி பாகம் பிரித்துக் கொண்டோம் என்றாலும் சரிதான்.

(3) சுப்பே கவுண்டர் மகன் பழனிச்சாமி கவுண்டருக்கு பு.ஏ.6.09 பூமியில் பொதுவில் சரிபாதி 3.04 ½ பூமி ஏ செட்யூலாக குறிப்பிட்டு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மற்றொரு பொதுவில் சரிபாதி 3.04 ½ பூமி வேலுச்சாமி கவுண்டரின் வாரிசுதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் 4 வது பக்கத்தில் 5 வது வரியில் மேற்படி இருவருக்கும் பிரிந்த பு.ஏ.6.09 பூமியில் பொதுவில் சரிபாதி என்று கண்டுள்ளது என்றால் சரிதான்.

தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.02.14 10:19:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்